# காஞ்சியும் சிலம்பும்

- தஞ்சாவூர் பி.எம்.சுந்தரம்

இறைவனின் முன்பாக நிவெதிக்கப்படுவதற்கென, இறைவனால் தோற்றுவிக்கப்பட்ட நுண்கலைகளில் தொன்மையானதும், சிறப்புமிக்கதுமாக விளங்குவது பரதக் கலையாகும். தமிழகத்தின் ஆலயங்களிலும், அரசவைகளிலும் வழங்கப் பெற்ற இக்கலை, பொதுவாகச் 'சதிர்' என்று அழைக்கப்பட்டிருப்பினும், 'பரதம்' அல்லது 'பரதநாட்டியம்' என்ற சொல்லாட்சியும், பழங்கால முதலாகவே இருந்து வந்திருக்கிறது. 'சதிர்' என்ற சொல் தமிழுக்குக்குரியதல்லவென்றும் சிலர் கருதுவர். 'சதிவழி வருவதோர் சதிரே' என்று திருஞான சம்பந்தர், தன் திருப்பாட்டிலும், 'சதிர் இளமடையார்' என்று நம்மாழ்வார் தம் பாசுரத்திலும் குறிப்பிட்டிருப்பதன் வாயிலாகச் 'சதிர்' எனுந்தமிழ்ச் சொல்லின் தொன்மை உணரப்படும். இதேவிதமாகப் 'பரதம்' என்ற பெயரும் தமிழகத்து ஆடற்கலைக்கு 1930ஆம் ஆண்டுவாக்கில், ஈ. சிருஷ்ணய்யர் என்பவரால் தான் முதன்முதலாகச் சூட்டப்பட்டதெனத் தவறாகச் சிலர் கூறுவதுமுண்டு. ''பாவமோட ராகந்தாள மிம் மூன்றும் முகர்ந்திடும் முறையினார் பரதம்'' என்று 'திருவிளையாடற்புராணம்' பேசும், ''பரதச்சிலம்பு'', ''விதமிகு பரதசுரவனிதயர்'' என்பார் அருணகிரிப் பெருமான். ''நிதம் பரதம் பயின்று'', ''கனக மன்றுஞ்சிற் பரதங்காட்டுச் சிதம்பரமே'' போன்றவாறு 'தில்லைத்திருவாயிரம்' குறிப்பிடுகிறது. 'ரம்பெ ஊர்வசி ரமணியரெல்லரு சந்ததிம் பரதநாட்டிய நடிஸி' எனக் கூறுவார் புரந்தரதாஸர். கோப்பெருஞ்சிங்க மன்னுக்குப் 'பரதம் வல்ல பெருமாள்' என்ற விருது இருந்தததைக் கல்வெட்டுக்கள் தெரிவிக்கின்றன. இன்னுங்கூறிப் போகலாமெனினும், விடுத்துப், 'பரத நாட்டியம்' எனுஞ்சொல் ஆடற்கலைக்கு புதிதாகத் தோற்றம் பெற்றதல்ல என்பதை மட்டும் வலியுறுத்த வேண்டியுள்ளது.

கலையில் ஆர்வம் பிறந்து, அதில் தேர்ந்து, சிறக்க வேண்டுமெனில், அவ்வாறாக ஒருவரின் சிரத்தில் பிரம்மன் எழுதியிருக்க வேண்டும். நல்லதொரு குருவையடைந்துப், பக்தி மேலிடத், தொண்டுகள் ஆற்றிக், கற்பதை மனத்திலிருத்திக், கடினமாக உழைக்கும் போது முன்னேற்றம் பிறக்கின்றது. பாரம்பரியம் இரு வகைப்பட்டது. வம்ச பாரம்பரியம், குரு பாரம்பரியம் என்று. இவ்விரு விதமான பேறும் பெற்றுப் பரதக் கலையில் மாமேதைகளாகத் திகழ்ந்தவர்கள் எண்ணிறந்தோர் ஆவர்.

நகரேஷுகாஞ்சி எனப் போற்றப்படும் காஞ்சிபுரம், சிற்பக் கலைக்குத் தமிழகத்தில்அடிகோலிய கோவில்கள் நிறைந்த புண்ணியத்தலம். பரதம் வல்லார் பலர் இவ்வூரில் இருந்து வந்தார்கள். பெங்களூரில் குடியேறியிருந்து, ஏராளமான சீடர்களை உருவாக்கிய காஞ்சி ஸதாசிவய்யா, 'அச்வதாடி' பச்சை முத்து முதலியார், பால சுப்ரமணிய முதலியார் - இப்படி அவ்வாரியனரான பல நாட்டிய ஆசான்களும், இந்தக் காஞ்சி புரத்தாருக்கும், முற்காலத்தில், திருமண உறவுமிருந்தது. இப்படிப்பட்ட நாட்டிய மேதைகளிலொருவர், பச்சைமுத்து முதலியார் (1738-1856). மைசூரில் மும்மடி கிருஷ்ணராஜ் உடையார் ஆட்சி செய்த காலத்தில், தஞ்சை நால்வரில் மூத்தவரான சின்னையாவுடன் அரசவைக் கலைஞராகப் பணியாற்றியவர், பச்சைமுத்து முதலியார். தலையில் அரிசி மாவைப் பரப்பி, அதன் மீது நின்று, ஸிம்ஹ நந்தன தாள ஜதியை இவர் மிருதங்கத்தில் முழக்கியபின், மாவின் மேற்பரப்பில் சிங்கத்தின் உருவம்

வரையப்பட்டிருந்ததாம். தன் உற்ற நண்பராகவுமிருந்த பச்சைமுத்து நட்டுவனாருடன், அடிக்கடி உரையாடி, நேரத்தைப் பயனுள்ளதாக மன்னர் போக்குவதுண்டு. ஒரு சமயம், இவ்வித உரையாடலின் போது, குதிரையைப் பற்றிய பேச்சு எழுந்தது. ''ஆடலாசிரியரின் வல்லவனாக இருப்பின், உயர்ந்த ஜாதிக் குதிரையைக் கூட ஆடச் செய்யலாம்'' என்று நட்டுவனார் கூறியதைக் கேட்டுக், ''குதிரையாவது... ஆடுவதாவது? நடக்கிற காரியமா? என நகையாடினார் அரசர். ''ஆறு மாத கால அவகாசமும்,நல்ல குதிரையும் தந்தால், நானே அதைச் செய்து காட்டுவேன்'', என்று மன்னரின் சாலையேற்ற பச்சைமுத்து எங்கு சென்றாரோ, எவ்வொறு பயிற்சி தந்தாரோ! குறித்த காலம் வந்தது. வர்ணம் ஒன்றுக்குக் குதிரையும் ஆடியது! அரசர் மட்டுமின்றி அனைவருமே வாயடைத்து வியந்தனர். இதனால் நட்டுவனாருக்கு 'அச்வதாடி' யென்ற சிறப்புப் பெயரை மன்னர் வழங்கிப் பாராட்டினார். சில ஆண்டுகளுக்குப் பின், தன் சொந்த ஊருக்குத் திரும்ப உடையாரிடம் உத்திரவு கேட்டார். பிரியா விடையளித்து. ''எது வேண்டுமானாலும் கேட்கலாம்... தருவேன்'' என்று மொழிந்தார் 'அச்வதாடி'. இதனால் தனது அன்றாடப் பூஜை சில நாட்களேனும் தடைப்படுமென்பதைக் கூடப் பொருட்படுத்தாமல், தன் அபிமானக் கலைஞரின் வேண்டுகோளை நிறைவேற்றினார், வள்ளலாக விளங்கிய அம்மன்னர், பச்சைமுத்து காலமான போது, சாதராக்களும், சந்தனக் கட்டைகளும் மைசூரிலிருந்து காஞ்சியில் வந்திறங்கின.

பச்சைமுத்து நட்டுவனாருக்குக் குருவப்ப முட்டுக்காரர் (1821-1870) என்றொரு மகனும், ஒரு மகளுமுண்டு. குருவப்ப முட்டுக்காரரின் மனைவி குப்பம்மாள் கன்னியப்ப முட்டுக்காரர் (1852-1907) என்ற ஒரே மகனைப் பெற்றார். கன்னியப்ப முதலியார், காஞ்சியிலிருந்து, சென்னை பட்டணப் பகுதியில் எடப்பாளையத்துக்குக் குடிபெயர்ந்து வாழலானார். குருவப்ப முட்டுக்காரரின் தங்கை (இவர் காஞ்சியிலேயே திருமணமாகி வாழ்ந்தவர்) ஒரு மகனையும், ஒரு மகளையும் பெற்றார். மகனின் பெயர் கொதண்டராம நட்டுவனார் என்பதாகும்.

(நாட்டியத் துறையில் கையாளப் பெறும் மிருதங்கத்தை முற்காலத்தில் 'முட்டு' என்பார்கள். இந்த முட்டுக்காரர்கள் 'பரதம்' ஆட்டி வைப்பதிலும் வல்லவர்கள்). தன் தாய் மாமன் குருவப்ப முதலியாரிடம் மிருதங்கம், பரதம் - இரு கலைகளையும் கற்ற கோதண்டராம நட்டுவனாருக்குக் கோவித்த ஸ்வாமி, திருவேங்கடம், கிருஷ்ணம்மாள் என்ற மூன்று மக்கள்.

திருவேங்கட நட்டுவனார், 1868இல் பிறந்தவர். கன்னியப்ப முட்டுக்காரரின் சீடர். இவரும் சென்னையில் பல ஆண்டுகள் வசித்திருந்தார்கள். இவரிடம் பரதம் பயின்ற பலரில் ஸ்வர்ணஸரஸ்வதி குறிப்பிடத்தக்கதொருவர். திருவேங்கட நட்டுவனாரின் மனைவி கௌரி அம்மாள். ஒரே மகள் அலமேலு. சிறந்த குரல் வளமும், இசைவன்மையும்கொண்டிருந்தவர் அலமேலு. ஆதிகேசவ முதலியார் என்பவர். திருவேங்கட நட்டுவனார் நிரந்தர முட்டுக்காரராக இருந்தவர்.

கோதண்ட நட்டுவனாரின் மகள் கிருஷ்ணம்மாள், நாதஸ்வரக் கலைஞர். காஞ்சீபுரம் குருஸ்வாமி முதலியாரின் மனைவி. இந்த அம்மையார் உலகுக்களித்த கலைச் செல்வங்கள் இருவர். மூத்தவராகிய குப்புஸ்வாமி முதலியார் (5.7.1905 - 7.9.1989) பரதநாட்டிய உலகில் தனக்கொப்பாரும் மிக்காருமில்லையெனத் திகழ்ந்த, தஞ்சாவூர் பாலஸரஸ்வதி அம்மையாரின் நாட்டியக் குழுவில் பல காலம் மிருதங்க விற்பன்னராக இருந்தவர். அடுத்துப்பிறந்த கலைச் செல்வம் எல்லப்ப நட்டுவனார்.

18.06.1908 அன்று தோன்றிய எல்லப்பா, தன் மாமன் திருவேங்கட நட்டுவனாரிடம் பரதத்திலும், சின்னையா நாயுடு என்பவரிடம் அபிநயத்தில் விசேடப் பயிற்சியும் பெற்றார். தஞ்சாவூர் கந்தப்ப நட்டுவனார், காஞ்சியில் குடியேறிய போது, அவருடன் நெருங்கிப் பழகிய எல்லப்ப நட்டுவனார், கலையில் பல்வேறு நுணுக்கங்களை அவரிடமிருந்து தெரிந்து கொண்டார். மிருதங்கம் சுந்தரேச முதலியார் என்பவரின் தங்கை, கல்யாணியெனும் நங்கையின் கரம் பிடித்த கந்தப்பா, எல்லாபலவுக்கு அதன் மூலம் உறவினருமானார். (இவ்விதக் கலைக்குடும்பங்களைச் சேர்ந்த ஆண்கள், தஞ்சை மாவட்டத்தில் 'பிள்ளை' என்றும், காஞ்சிபுரம் போன்ற பகுதிகளிலும், வேறு சில தென்மாவட்டங்களிலும் 'முதலியார்' என்றும் பட்டப் பெயர்களை இணைத்துக் கொள்வது வழக்கமாயினும், இவர்கள், ஒரே குலத்திற்தோன்றிய உறவினரேயாவர்). தன் பதினேழாவது பிராயத்திலேயே நட்டுவாங்கம் செய்வதில் வன்மை பெற்றுவிட்ட எல்லப்ப நட்டுவனார், கந்தப்ப பிள்ளைக்குத் துணை நட்டுவனராகப், பாலஸ்ரஸ்வதியின் குழுவில் பங்கேற்கத் தொடங்கினார். கந்தப்பப் பிள்ளை 4.12.1942 அன்று காலமான பின்.எல்லப்பா, முதன்மை நட்டுவனராகப் பணிப்பொறுப்பெற்றார். பின்னர் கந்தப்ப நட்டுவனாரின் குமாரான கணேசன், அக்குழுவினை பெற்றதும், எல்லப்பா தன்யே வந்து பலருக்கு ஆடற்கலையைக் கற்பிக்க முனைந்து மிக விரைவில் சிறந்ததொரு நாட்டிய ஆசானாகப் பரிணமிக்கலானார். அவருடைய இனிமையான பாட்டும், சிறப்பான நட்டுவாங்கமும் சக கலைஞர்களிடையே அவருடைய மதிப்பை உயர்த்தியதோடு, பல சீடர்களையும் ஈர்த்தன. முற்றிலுமாகவோ அல்லது சில காலம் மட்டுமேயோ எல்லப்ப நட்டுவனாரிடம் பரதங் கற்று மேன்மையும் கீர்த்தியும் வாய்க்கப் பெற்றவர்களைப் பட்டியல் போட்டுத்தான் கூற வேண்டும். யாமினீ கிருஷ்ண மூர்த்தி, சித்ரலேகா, சந்திரலேகா, உடுப்பி லஷ்மி நாராயண், லஷ்மி விஸ்வநாதன், ஸபீன், தாரா ராமஸ்வாமி, அஞ்சலி போன்றோர் குறிப்பிடத்தக்க சிலர். 'பரத சாஸ்திர ரத்னா' போன்ற விருதுகள் பல அவருக்கு அணி செய்து, தம்மைப் பெருமைபடுத்திக் கொண்டன. வரலஷ்மி அம்மையார் எல்லப்ப நட்டுவனாரின் மனைவி. ஞான சுந்தரம், லஷ்மி, சுப்பிரமணியம் (பழனி) மூவரும் அவரது மக்கள். தந்தையைப் பின்பற்றி நல்ல நாட்டிய ஆசானாக மலர்ந்து, கல்கத்தாவில் வசித்த ஞானசுந்தரம், வஞ்சத்துக்கிரையாகி மரணத்தைத் தழுவி விட்டார். அமைதியின் உறைவிடமாகக் கலையின் திருவிடமாக விளங்கிய எல்லப்ப நட்டுவனார் 22.7.1974 அன்று புகழுட லெய்திக் கலையுகத்துக்குப் பேரிழப்பைத் தந்தார்.

எல்லப்ப நட்டுவனாருக்குக், கலைத்துறையில் செயலாற்றும் மகன்கள் இன்று இல்லாதிருக்கலாம். பெற்ற மக்களுக்கிணையாகப், பாசத்தைப் பொழிந்து, அவரால் வார்த்து வடிக்கப்பட்ட சீடர்கள் மிகப் பலர். அவரிடம் வார்த்து வடிக்கப்பட்ட சீடர்கள் மிகப் பலர். அவரிடம் பயின்றோரில் சிலர். வேறு ஆசான்களை நாடிப் போயிருக்கலாம். இன்னும் சிலர் பரதத்தின் பாங்கினை விடுத்து, அரங்கத்தை உடற்பயிற்சிக் கூடமாக மாற்றியுமிருக்கலாம். ஆயினும், காஞ்சியின் சிலம்புச் செல்வரின் கலை வாரிசுகளாகப் பரதத்தை மரவு பிறழாது தொடர்ந்து மிளிரச் செய்யும் உடுப்பி லஷ்மி நாராயன், லஷ்மி விஸ்வநாதன் போன்ற சிலரும் இருப்பது கலையுகத்தின் போற்றலுக்குரிய விஷயம்.

'குரு : ஸாக்ஷாத் பரம் ப்ரஹ்ம' எனும் வாக்கியத்து உருவகம் வேண்டுமெனில், உடுப்பி லஷ்மி நாராயணவைச் சுட்டலாம். கலையே தன் மூச்சு. குருவே தன் உயிரியக்கம் என்றிருப்பவர் அவர். உண்மையில் குருபக்தி, கலை இவற்றைத் தவிர வேறேதும் அவருக்குத் தெரிந்திருக்குமோ

என்பது கூட, விடை காணவியலாத வினாவாகவே இருக்கும். நாட்டியக் கலைஞராக ஆகி, அரங்குகள் பலவற்றில் நடனமிட்டுத், திரையுலகில் நாட்டிய இயக்குனராகிப் பின்னர், மரபு வழியிலான பரத ஆசானாகப் பரிணமித்து, எண்ணற்ற கலை வாரிசுகளை உருவாக்கி வருபவர் அவர். பெற்றோரின் நினைவு நாளையே, நினைவிலிருந்து மறந்து விடும் நிலைமை சகஜமாகி வருகின்ற இன்றைய காலகட்டத்தில், குருவின் நினைவு நாளையொரு விழாவெடுத்துக் கொண்டாடுவதென்றால், அது உடுப்பி லஷ்மி நாராயணாவுக்குத் தன் குருநாதரின் பாலிலுள்ள அளவற்ற பக்தியின் வெளிப்பாடாகத் தானேயிருக்க முடியும்? ‘ஸர்வதா குரு ஸ்மரணம்’ என்பதையே தாரக மந்திரமாகக் கொண்ட உடுப்பி லஷ்மி நாராயன், தன்னை நாடி வரும் ஆர்வமிக்காருக்குப் பரதக் கலையைப் புகட்டுவதோடு, தன் மகள் மதுமதிக்கும் உரிய பயிற்சியளித்து, அவரையொரு தகுதியும், சிறப்பும் மிக்க நடனக் கலைஞராக உருவாக்கியிருக்கிறார். ‘ஏதோ கற்றோம், ஆடினோம், விருதுகள் பல பெற்றோம். கல்யாணம் வந்தது, கலையும் அகன்றது’ என்பது போன்ற பேச்சுக்கு இடந்தராதவராக மதுமதியும் தற்போது பலருக்குப் பரதநாட்டியக் கலையைப் பயிற்றுவிப்பதிலும் தன்னை ஈடுபடுத்திக் கொண்டிருக்கிறார். எத்தனையோ நூற்றாண்டுகளாகக் காஞ்சியில் பரத விற்பன்னர் பலரால் பேணி வளர்க்கப்பட்ட கலைமரபு மங்காமல், சுடர் வீட்டு பிரகாசிப்பது தொடர்ந்து கொண்டிருக்கிறது.

### எல்லப்ப நட்டுவனாரின் வம்சாவளிச் சுருக்கம்

‘அச்வதாடி’ பச்சைமுத்து நட்டுவனார்

- குருவப்ப முட்டுக்காரர், மனைவி - குப்பம்மாள்
  - கன்னியப்ப முட்டுகாரர்
    - மதுரை முதலியார் (மிருதங்கம்)
    - வீரம்மாள்
    - முனியம்மாள்
    - வேலாயுத முதலியார் (மிருதங்கம்)
    - ஸி.வி. வீருஸ்வாமி (மிருதங்கம், கஞ்சிரா)
- மகள்
  - கோதண்டராம நட்டுவனார்
    - கோவிந்தஸ்வாமி (மிருந்தகம்)
    - திருவேங்கட நட்டுவனார், மனைவி - கௌரி, மகள் - அலமேலு
    - கிருஷ்ணம்மாள் (கணவர்) நாதஸ்வரம் குருஸ்வாமி முதலியார்
  - மகள்

நாகஸ்வரம் குருஸ்வாமி முதலியார்

- முதல் மனைவி - கிருஷ்ணம்மாள்
  - குப்புஸ்வாமி முதலியார் (மிருதங்கம்)
  - எல்லப்ப நட்டுவனார்
- இரண்டாவது மனைவி
  - கோவிந்தஸ்வாமி முதலியார், மனைவி - கமலா
  - ஜி. ஏகாம்பரம் (மிருதங்கம்)
  - ‘ஆப்ளா’ முனுஸ்வாமி முதலியார் (மிருதங்கம்)